Publication : Maalai Malar

Date : Nov 20, 2011

# பள்ளி கருத்தரங்கு

சென்னை, நவ 20–

எல்லைகளைக் கடந்த கல்வி என்ற தலைப்பில் ஐடிஸ்கவரி எக்ஸீட் நிறுவனம் கருத்தரங்கை நடத்தியது. நாளைய பள்ளி குறித்து 3–வது ஆண்டாக இந்த கருத்தரங்கு நடந்தது. சிறந்த கற்பிக்கும் வழிமுறைகள் மற்றும் திட்டங்கள் மூலம் கல்வித் தரத்தை மேம்படுத்த வேண்டியதன் தேவை குறித்து கல்வியாளர்கள் வற்புறுத்தினார்கள். இந்த கருத்தரங்கில் ஐடிஸ்கவரி நிறுவனர் ஆஷிஷ் ராஜ்பால், பேராசிரியர் பாஸ்கர் ராமமூர்த்தி, அமெரிக்கன் சர்வதேச பள்ளி தலைவர் ஆண்ட்ரூ ஏ.ஹூவர், கீதா அய்யர், அருணா ரத்னம், தேபஞ்ஜன் சக்கரவர்த்தி, வினீத் ஜோஷி, ராஜேந்திர பவார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.